# அரசின் தீர்வுத் திட்டம் இலங்கை நிலைமையை மோசமாக்கும்

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 10 இதழ் 140

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24 - 6 - 1995

(கொழும்பு)

இனப்பிரச்னையை தீர்க்க வென அரசினால் தயாரிக்கப் பட்டுள்ள தீர் வு த் தி ட் ட ம் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்க்கும் நோக் கத்தை கைவிட்டு அபிப்பிரா யம் சொல்பவர்களை திருப் திப் படுத்தும் நோக்கில் அமை ந்து விடும் என்று அரச உயர் மட்டங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இனப்பிரச்னைத தீர்வுக்கான ஆதரவை வென்றெடுக்கும் வகையில் தமிழ் முஸ்லிம் கட்சி கள், எதிர்க்கட்சி தலைவர் மற் றும் பௌத்த பீடாதிபதிகள் ஆகியோரைச் சந்தித்து தீர் வுத் திட்டம் சம்பந்தமாக பேசிவருவதாக கூறியுள்

(6-ம் பக்கம் பார்க்க)

## பதுங்கியிருந்த இராணுவம் சுட்டு தமிழ் மகன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோறுவெளி என்னும் இடத்தில் ராணுவத் தினர் பதுங்கியிருந்து ஒரு தமிழ் மகனைச் சுட்டுக்கொன்ற னர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஐந்து பிள்ளைளின் த ந்தை யான பாக்கியராசா (சந்தி வெளி) என்பவரே கொல்லப் பட்டவராவார்; -ரி

# மணலாறில் புலிகள் தாக்குதல்

# இராணுவ கோப்ரல் உயிரிழப்பு!

## ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

**மணலாறில் விடுதலைப் புலிகள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் இராணுவ கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டார் ஐவர் படுகாய மடைந்தனர்.**

கடந்த திங்களன்று இரவு மணலாறில் கென்ற்பாம்' ரணவாபுர பகுதியில் விடுத லைப் புலிகள் நடத்திய தாக்கு தலில் லான்ஸ் கோபரலான பத்மனந்த என்ற சிப்பாய் படுகாயமடைந்தார்.

இதே தினம் காலை 7 மணி யாவில் ஜானகபுர பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ராணுவ கோப் ரல் ஒருவர் கொல்லப்பட் டார். நான்கு பேர் படுகாய மடைந்தனர்.

இதே தினம் கொக்குத் தொடுவாயில் நடைபெற்ற தாக்குதலில் லெப்டினன் உட் பட நான்கு ராணுவத்தினர் கொல்லப்பட்டதும் 12 படை காயமடைந்ததும் குறிப்பிடத் தக்கது. ரி

### களுத்துறையில் தமிழ் இளைஞர்

## கடத்தப்பட்டுக் கொலை

(கொழும்பு)

களுத்துறைப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய் யப்பட்டுள்ளதாக கொழும் புத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இவ் இளைஞரின் கடத்தல் மற்றும் கொலைச் சம்பவம் தொடர்பாக பொலிசார் தீவிர விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மலையகத்தில் பொலிசாரால் அண்மையில் கைது செய்யப்பட்ட எட்டுத் தமிழர்களும் இதுவரையில் விடுதலை செய்யப்படவில்லை யென்றும் இவ் இளைஞர்கள் எட்டுப்பேரும் தீவிர விசார ணைக்குட்படுத்தப்பட்டுள்ள தாகவும் பொலிஸ் வட்டாரங் கள் தெரிவிக்கின்றன. கரி

## இந்தியத்தலையீட்டால் இலங்கையில் யுத்தம் 30 வருடங்களுக்கு தொடரும்

(கொழும்பு)

இந்திய அரசு தமிழரின் விடு தலைப் போராட்டத்தை நசுக் கும் நோக்கில் குறியாக இருக் கும் வரை இலங்கை அரசு புலிகளுடன் பேசி ஒரு சமாதா னத் தீர்வை ஏற்படுத்துவ தென்பது நினைத்துப் பார்க்க முடியாத காரியமாகிவிடும் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலைவிவகாரத் தில் இந்தியாவின் நடவடிக்கை தலைவர் பிரபாகரனை ஒரு சாதாரண குற்றவாளியின் நிலைக்கு தள்ளிவிட்டதாக சிங் கள இனவாதிகள் நோக்குகின் றனர் என்றும் அப்பத்திரிகை

(6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ உணவுவிநியோக கப்பல் திருமலையில் தரிப்பு

(கொழும்பு)

வடபகுதி இராணுவ முகாம் களுக்கு உணவு மற்றும் அத்தி யாவசிய பொருட்களை விநி யோகிப்பதற்கென சிங்கப்பூர் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்த எல். ஜி. எம். ரக கப்பல் தற்போது திருமலையில் தரித்து நிற்கிற தாம்,

இன்னும் சில தினங்களில் இக்கப்பல் உணவு விநியோக வேலையில் ஈடுபடவுள்ளதென் றும் இராணுவத்தினரின் தேவைக்கென தனியாக இக் கப்பல் கொள்வனவு செய்யப் பட்டதாகவும் மேலும் அறி யப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் தாக்கு தல்களினால் இரு அவ்ரோ விமானங்கள் வீழ்த்தப்பட் டமை, மற்றும் ஸ்ரீலங்கா கடற்படை கப்பல்கள் அழிக் கப்பட்டமையையடுத்து வட

(2ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு'
வாரமலர்

நாளை 25-06-95
ஞாயிறு
வெளிவருகிறது

- சிரித்திரன் சுந்தர்
- அ. செ. மு.
- இயல்வாணன்
- டாக்டர் தில்லைச்சந்திரன்
- மு. திருநாவுக்கரசு
- ச. தியாகராசா

ஆகியோரினதும் படைப்புக்களுடன், வாரபலன், சிறுவர் அரங்கம், பெண்கள் உலகம் ஆகிய பகுதிகளும் இடம்பெறுகின்றன.

அதிக பக்கங்கள்

விலை ரூபா
ஐந்து மட்டுமே

## கிழக்கில் புலிகள் - இராணுவம் பல இடங்களில் கடும் மோதல்

[கொழும்பு]

கிழக்குப் பகுதியில் விடுத லைப் புலிகளுக்கும் படையின ருக்கும் இடையே சில தினங் களாக ஆங்காங்கே மோதல் கள் இடம்பெற்றுவருவதாக இராணுவ பேச்சாளர் பிரிகே டியர் சரத்முனசிங்க நேற்று தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: மட்டக்களப்பிற்கு தெற்கே ஹப்பலவத்தை என்னுமிடத் தில் கடந்த 21ம் திகதி விசேட அதிரடிப்படையிருக் கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்ட தாகவும் தெரிவித்தார்.

இதேவேளை திருமலை பெரிய பாலம் பகுதியில் கடந்த 21ம் திகதி இரவு கால்நடையாக ரோந்து சென்ற இராணுவத் தினர்மீது விடுதலைப புலிகள்

(2ம் பக்கம் பாக்க)

## ஐ. தே. க. கொள்வனவு செய்த ஆயுதம் யுத்தம் செய்யக்கூடியதாக இல்லை! - கேணல் ரத்வத்த

(கொழும்பு]

வடக்கு-கிழக்கு யுத்தத்திற் கென கடந்த ஐ. தே. க ஆட்சியினர் வெளிநாடுகளி லிருந்து கொள்வனவு செய்த இராணுவத் தளபாடங்கள் யுத்தம செய்வதற்கு தகுதி வாய்ந்தவையல்லவென பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்த ரத்வத்த தெரி வித்துள்ளார்.

கொழும்பில் பத்திரிகை

(6ம் பக்கம் பார்க்க)

## கல்லடியில் பொலிஸ் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

கல்லடி சிவானந்தவித்தி யாலயத்திற்கு முன்னால் ரோந்து சென்ற பொலி சார் மீது விடுதலைப்புலிகள் கைக்குண்டு தாக்குதலை மேற் கொண்டனர்.

இதில் பொலிசார் தரப் பில் சேதம் ஏற்பட்ட

(6ம் பக்கம் பார்க்க)

## மட்டு. குண்டு வெடிப்பில் இரு பொலிஸார் பலி!

]மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் குண்டு ஒன்று வெடித்ததில் இரு பொலிஸார் பலியானார்கள்.

கடந்த திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் மட் டக்களப்பு மயிலம்பாவெளி

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினாப் பத்திரம் 1, வினாப் பத்திரம் 2 க்குரிய ''பொது விவேகம். பொதறிவு'' வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம், (ஏ-5027)

### ஆண்டு-5 புலமைப்பரிசில்

ஆண்டு-5 புலமைப் பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியிடப்படுகின்றன அடுத்த வெளியீடு 25-6-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். BOND 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (எ 5017)

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள்தனி) பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும் (48%) கொடுக்கப்படும். 100 ரேணியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50. யாழ் மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 5036)

### விற்பனையாகிறது

நயினை நாகபூசணி அம்மனின் உற்சவத்தை முன்னிட்டு, நயினை நாகபூசணி படம் பிறேம் போட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. விலை ரூபா 140/-. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (எ 5039)

### வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் கார்த்திகைத் திருவிழா இன்று 24ம் திகதி சனிக்கிழமை மாலை 5. 00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து நடைபெறும்.

-154

### யாழ். பல்கலைக்கழகம்

மகாபொல கொடுப்பனவு

மருத்துவபீட மாணவர்களுக்கு 3ம், 4ம் தவணைப் பணங்களும். ஏனைய மாணவர்களுக்கு 3ம், 4ம், 5ம் தவணைப் பணங்களும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்.

(எ-5043)

# தேர்த் திருவிழாவில் நகைகள் திருட்டு

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்த் திருவிழாவின்போது இருவரின் தங்கச் சங்கிலிகள் இனம் தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது.

தொல்புரத்தைச் சேர்ந்த முருகையா - சுவேந்தினியின் (வயது-5) 2½ பவுன் தங்கப் பதக்கம் சங்கிலியும், மு.இராசரத்தினம்-ரசிதா (வயது 10) இவரின் 2½ பவுன் தங்கப்பதக்கம் சங்கிலியும் இனம் தெரியாத நபர்களால் இழுந்து அறுத்துத் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச்சம்பந்தமாகச் சங்கிலி பறித்கொடுத்தவர்கள் தமிழீழக் காவல்துறையில் முறைப்பாடு செய்துள்ளனர். 154-சி

## அறிவித்தல்

## ஒத்திவைத்தல்

25-06-1995ல் நடைபெறவிருந்த யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையத்தின் பொதுச் சபைக் கூட்டம், தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

(எ 5041) செயலாளர்.

11 - 07 - 1995 ம் திகதி

நெல்லியடி

மத்திய மகா வித்தியாலயத்தில்

# நாமிருக்கும் நாடு நமது

நாடகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடாத்தப்படவிருந்த 'நாமிருக்கும் நாடு நமது' என்னும் நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தால் 11-07-1995ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிக்கு நடைபெறும்.

அன்பளிப்பு:- 100- 50/- 20/-

மாணவர்களுக்கு 10/-

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(எ- 5044)

## 45வது நாள் நினைவஞ்சலி

சபிண்டீகரணம் (வீட்டுக்கிருத்தியம்)



செல்வன் கந்தசாமி கவிதாசன்

11-05-1995 திகதி அகால மரணமடைந்த கைதடியைச் சேர்ந்த செல்வன் கந்தசாமி கவிதாசன் அவர்களது சபிண்டீகரண கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (24-06-95) நண்பகல் நடைபெறும்.

அன்னாரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

கைதடி தெற்கு,
கைதடி.
தகவல்: சி: வைத்தியநாதன்.

(சி-1528)

## சீரான முறையில் சீருடை வழங்கிய உடுவில் கோட்ட அதிபர்களுக்கு பாராட்டு

(உடுவில்)

இவ் வருடம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச சீருடைகளை கணக்காகபெற்று உரிய மாணவர்களுக்கு சீரான முறையில் வழங்கி கணக்குகளை சரிவர ஒப்படைத்த உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்களுக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் ஏனைய கல்விக் கோட்டங்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் எதுவித பிரச்சனைகளுமின்றியும் இலவச சீருடை விநியோகம் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், பற்றுக்குறையோ மேலதிக தேவைகளோ ஏற்படாது அதிபர்கள் சீரான முறையில் சீருடைகளை பெற்று வழங்கியுள்ளனர் எனவும் அவர் தமது பாராட்டில் கூறியுள்ளார்.

பாடசாலையின் உள்விவகாரங்கள் அனைத்துக்கும் பாடசாலை அதிபர்களே முழு அதிகாரம் உடையவர்கள் என்றும் தமது அதிகாரத்தை உரியமுறையில் அதிபர்கள் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் அங்கு எடுத்துரைத்தார். -109

# 'மானிட அமைப்பில் உள்ளமே உயர்ந்தது'

(யாழ்ப்பாணம்)

''உடலில் ஊனமிருக்கலாம் ஆனால் உள்ளத்தில் ஊனமிருக்கக் கூடாது. மானிட அமைப்பில் உடலிலும் உயர்ந்தது உள்ளம். உள்ளத்தை நாம் நல்லபடி பேண வேண்டும்.''

இவ்வாறு கொழும்புத்துறை ஸ்ரீ அம்பலவாண விநாயகர் ஆலய பரிபாலன சபையினர், சமயப் பேருரை நடத்திய திரு. கா. கணேசதாசனுக்கு 'சமூகசோதி' எனப் பட்டம் வழங்கி நடாத்திய பாராட்டு விழாவில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் ஆ. சோதிலிங்கம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: மனதில் நேர்மையும், ஒழுக்கமும், கடவுள் நம்பிக்கையும் இல்லாத ஒருவன் கீழானவனாகக் கருதப்படுவான். ஒருவனின் உள்ளத்தைப் பண்படுத்தி நற்சிந்தனைகளை ஏற்படுத்துவதற்கு சமயப் பேருரைகள் ஆற்றுவது இன்றியமையாதது. அந்தப் பணியை கா. கணேசநாதன் புகழையோ, வருவாயையோ எதிர்பாராது செய்து வருவதற்காக பாராட்டுகிறேன் என்றார்.

இதைத் தொடர்ந்து இந்து இளைஞர் மன்றத் தலைவரும் மற்றும் பலரும் உரையாற்றினார்கள். இளைப்பாறிய காவற்துறை அதிகாரி ஆ. இராசையா திரு. கணேசதாசனுக்கு கதராடை போர்த்திக் கௌரவித்தார். இ. பரராஜசிங்கம் 'சமூகசோதி' எனும் பட்டம் வழங்கி வாழ்த்தினர்.

170- ர- சி

## 'மருத்துவம்' வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆங்கில மருந்து வாணிபர் மன்றம் வெளியிடும் 'மருத்துவம்' வைகாசி மாத பத்திரிகை வெளிவந்துள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

24—06—1995

சனி இரவு

08-02 புரட்சிக்குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர்கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம்- ''முதலுதவியும் அதன் அவசியமும்''

1995 06—25

ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
08-00 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

24—06-1995

சனி மாலை

05 01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் விஞடி விஞ
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## அகதி முகாம்கள் பொறுப்பேற்பு

(கோப்பாய்)

வசாவிளான். கட்டுவன் போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து உரும்பிராய் யோகபுரம் பகுதிகளில் இயங்கி வந்த மூன்று இடம் பெயர்ந்தோர் முகாம்களை யாழ். மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் பொறுப்பேற்றுள்ளது. 166-கி

### இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி இராணுவ முகாம்களின் உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்கு இலங்கை கடற்படை கப்பல்கள் உட்பட பல அமைப்புக்கள் மறுத்து வந்ததையடுத்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. க-ரி

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை

இதேவேளை மட்டக்களப்பு காடுகளில் படையினர் பெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தது.

பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் பெண்டுகல் சேனை, தரவை. கூழாவடி ஆகிய பகுதிகளிலுள்ள காடுகளில் குவிக்கப்பட்டு இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

க-ரி

# யாழ்ப்பாணத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமாம்

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தைவிட யாழ்ப்பாணத்தை எப்படியாவது கைப்பற்றவேண்டும் என்பதே இராணுவ ஆலோசகர்களின் ஒரே எண்ணமாகும்என 'ரஸ்மிய' என்ற சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; வடபிராந்திய கடற்கரைப் பகுதிகளை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதே பாதுகாப்புப் படையினரின் முதல் நோக்கமாகும்.

கிழக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதலானது படையினரின் இம்முயற்சியை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளது.

வடக்கின் யுத்தப்புயல் இப்பொழுது கிழக்கிலேயே வீசுகிறது என்றும் எத்தகைய பாதிப்பு ஏற்படினும் வடக்கை கைப்பற்றுவதே படையினரின் முழு நோக்கம் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. [க-சி]

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மகா சங்காபிஷேகமும்உற்சவமும் எதிர்வரும் 26ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

## மணிவாக்கு

விதி விதி என்று கதறுபவர்கள் கேவலமான அடிமை உள்ளம் கொண்டவர்கள். மனிதன் தான் தெரிந்து செய்த அல்லது தன் சக்திக்கு மேற்பட்டதாகக் கருதுகிற செயலின் தவறை மறைக்கவே அவ்வாறு ஓலமிடுகிறான்.

— பகவான்.

# படையினர் குவிக்கப்பட்டு கிழக்கில் பாரிய தேடுதல்

[மட்டக்களப்பு]

அக்கரைப்பற்றுப் பகுதியில் மேலதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கடந்த சில தினங்களாக பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு பெண்டுகள் சேனை உட்பட பலபகுதிகளிலும் பலத்த தேடுதல் நடாத்தப்பட்டு வருவதாகவும், மன்னார் காட்டுப் பகுதியிலும் இத்தகைய தேடுதல் நடாத்தப்பட்டுவருவதாகவும்தெரியவருகிறது.

கிழக்கில் அண்மைக்காலமாக அடுத்தடுத்து சுற்றிவளைப்புக்கள் நடைபெறுவதும் பெருமளவு தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்படுவதும் வழமையான நிகழ்வாகிவிட்டது. கைதுசெய்யப்படும் தமிழர்கள்பலர் பின்னர் காணமல் போய்விடுவதாகவும் உறவினர்கள் புகார் தெரிவித்து வருகின்றனர், [க-சி[

## நமது நோக்கு

### இடைக்கால நிர்வாகசபை

திருமதி சந்திரிகா குமாரதுங்காவை கொழும்பிலிருந்து இயங்கும் சில தமிழ்க் குழுக்கள் வட—கிழக்கில இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைக்குமாறு வலியுறுத்தின. ஈ. பி. டி. பி. யினரும், புளொட்டும் தங்களுக்கு நாடாளுமன்றத்தில் ஒருவகை விபத்தின் மூலம் கிடைத்த ஆசனங்கள் இருப்பதால் இடைக்கால நிர்வாக சபையை தம்வசம் வைத்துக்கொண்டு பல சலுகைகளைப் பெறலாம் என்று எண்ணுகிறார்கள். டக்ளஸ் தேவானந்தா இச் சபை அமைக்கப்பட்டால் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வாழும் தமிழ் மக்களுடைய அபிலாசைகளைத் தீர்த்துவைக்குமென்றும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் முஸ்லிம் மக்களின் தேவைகளையும் கவனிக்கலாம் என்றும் கூறுகிறார். தீவுப் பகுதிகளில வாழும் தமிழ் மக்கள் எவ்வித கட்டுப்பாட்டுக்குள் வாழ்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இரவில் அவர்கள் வெளியில் நடமாட முடியாது; உணவுப்பொருட்கள் கூட சரிவர வழங்கப்படுவதில்லை. இவற்றிற்கெல்லாம் தீவுப் பகுதிகளில் இருக்கும் ஈ. பி. டி. பி. யினரே பொறுப்பு. அவர்கள் இடைக்கால நிர்வாகசபை மூலம் அதிகாரங்களைப் பெற்று மக்களை மேலும் சுரண்டப் பார்க்கிறார்கள்.

புளொட் குழுவின் சித்தார்த்தனும் இடைக்கால நிர்வாகசபையை வரவேற்கிறார். அவ்வித சபை உருவாக்கப்பட்டால் வடகிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் அரசாங்கம் பேணலாம் என்று கூறுகிறார். இவர் எந்தக் கனவு உலகில் வசிக்கிறாரோ தெரியவில்லை

ரெலோ இயக்கத்தினருக்கு நாடாளுமன்றத்தில் ஆசனங்கள் இல்லை. ஆகவே அவர்கள் இடைக்கால நிர்வாகசபை அமைப்பதை எதிர்க்கிறார்கள். நிரந்தரத் தீர்வொன்றை அடைய முயற்சிகள் எடுக்கப்படும் இவ்வேளையில் இடைக்கால ஒழுங்கு தேவையில்லை என்று தத்துவம் பேசுகிறார் அவ்வமைப்பின் பொதுக்காரியதரிசி.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் மேற்படி நிலைப்பாட்டையே தனது கருத்தாக தெரிவித்துள்ளது.

இதுபற்றி ஆராய்வதற்கு வட-கிழக்கு பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் கூடியபோது வட-கிழக்கு பகுதிகளில் இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி அளித்துள்ளார் ஆனால் அது எவ்வகையில் அமைக்கப்படவேண்டும் என்பது பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் விரைவில் அறிவிக்கப்படுமாம். கிணறு வெட்டப் பூதம் வெளிக்கிட்ட கதையாக முடிந்தாலும் இது முடியும். யாரை யார்ஆழுவது என்பது தான் பிரச்னை. கிழக்கு மக்கள் தான் பாவம்.

இடைக்கால நிர்வாக சபையில் கூட்டணியினர் பங்குபற்றுமைக்கு கேலிக்கிடமான காரணங்களைக் கூறியுள்ளார்கள். அவை அமையவிருக்கும்சபைக்கு என்ன அதிகாரங்கள் என்று தெரியவில்லையாம், அடுத்தது ஜனாதிபதியினால் அமைக்கப்படும் இச்சபை எந்த நேரமும் கலைக்கப்படலாம் மற்றது அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குள் கருத்தொற்றுமையில்லையாம். இவ்வளவும் சரிசெய்வப்பட்டால் அவர்களும் பங்கு பற்றுவார்கள் போல் அவர்களின் நிலைப்பாடு உள்ளது.

# கொழும்பில் தமிழருக்கு வேலை வழங்க பல நிறுவனங்கள் தயக்கம்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்களுக்கு வேலை வழங்குவதற்குப் பல நிறுவனங்களின் உரிமையாளர்கள் மறுப்புத் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றுக்குப் புதிதாக வேலைக்கு விண்ணப்பம் செய்பவர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் அண்மைக் காலமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. குறிப்பாக, யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு வேலை வழங்குவதற்குப் பெரும் தயக்கம் காட்டப்படுகின்றது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தமிழர்கள் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எனத் தெரிந்ததும் சாக்குப்போக்குக் கூறி அவர்களைத் திருப்பி அனுப்பி விடுகின்றனராம்.

கொழும்பில் தமிழர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களும் யாழ்ப்பாணத் தமிழர்களைப் புதிதாக வேலைக்குச் சேர்த்துக்கொள்ள அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வி சி

## யாழ்.மாவட்டத்திற்கான 210 நீரிறைக்கும் இயந்திரம் கொழும்பில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சமாசத்திற்குச் சொந்தமான 210 நீரிறைக்கும் இயந்திரங்கள், கொழும்பில் தவம் கிடக்கின்றன.

மேற்படி சமாசம் கொழும்பில் கொள்முதல் செய்த இந்த நீரிறைக்கும் இயந்திரங்களைக் கப்பல் மூலம் வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக மேற்படி நீரிறைக்கும் இயந்திரங்கள் வடபகுதிக்கு எடுத்து வரமுடியாமல் சமாசம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றது. 170 சி

## உள்ளூர் தபால்களுக்கு ரூ. 2 முத்திரை ஒட்டுக

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் தபால்களுக்கு இரண்டு ரூபா முத்திரையை ஒட்டி அனுப்புமாறு யாழ் பிரதம தபாலகம் மக்களைக் கேட்டுள்ளது.

அண்மைக் காலமாக பொது மக்கள் ஒரு ரூபா முத்திரை ஒட்டியே தபால்களை அனுப்புகின்றார்கள் ஆனால் உள்நாட்டு தபாலின் பெறுமதி இரண்டு ரூபாவாகும்.

இதற்கு மாறாக மக்கள் தொடர்ந்து ஒரு ரூபா முத்திரையை ஒட்டி உள்நாட்டு தபால்களை அனுப்பினால் தபால்கள் சென்றடைபவர்களிடம் மேலதிகமாக இரண்டு ரூபா அறவிடப்படும்.

இதனை கவனத்தில் கொண்டு பொதுமக்கள் உள்நாட்டு தபால்களுக்கு இரண்டு ரூபா முத்திரைகளை ஒட்டி அனுப்புமாறு யாழ் பிரதம தபாலகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. 170- சி

## ரயில்நிலையங்களில் தமிழ் ஒலிபரப்பு பெருமளவு குறைப்பு

(கொழும்பு)

தென் இலங்கையில் உள்ள ரயில் நிலையங்கள் அனைத்திலும் தமிழில் ஒலிபரப்பப்படும் அறிவித்தல்கள் குறைக்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையம், மருதானை ருகமை, பொல்காவலை, அநுராதபுரம், கண்டி ஆகிய ரயில் நிலையங்களில் இதுவரைகாலமும் மும்மொழிகளிலும் பயணிகளின் நன்மை கருதி ஒலிபரப்பப்பட்டு வந்தது.

கடந்த வாரம் முதல் மேற்படு ரயில் நிலையங்களில் தமிழில் ஒலிபரப்பப்படுவது பெருமளவில் குறைக்கப்பட்டு விட்டதினால் தமிழ் பயணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் அறிவித்தல்கள் ஒலிபரப்பப் படுவதினால், தமிழ் பயணிகள் ரயில்கள் வரும்நேரத்தையும், குறிப்பிட்ட ரயில்கள் எந்த மேடைக்கு வருகின்றன என்பதையும் தெரிந்து கொள்ள முடியாது சிரமப்படுகின்றார்களாம், வி- சி

## பலதும் பத்தும்

### அந்தக் கணிப்பு

1970களில் உலகின் மிகப் பெரிய பயங்கரவாதி எனப் பரபரப்பாகப் பேசப்பட்டவர் யார் தெரியுமோ? பலஸ்தீனிய விடுதலை வீரர் யசீர் அரபாத்!

அவரால்... ஐ. நா. சபையிலேயே ஒரு புதுமையான.. வழக்கத்திற்கு மாறான நிகழ்ச்சி ஏற்பட்டது நினைவிருக்கிறதா? சபைக்குள் எவரும் ஆயுதங்களுடன் அனுமதிக்கப்படுவதில்லை; ஆனால்... அரபாத் கைத்துப்பாக்கியோடு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்

''ஒரு கையில் துப்பாக்கியோடும் மறுகையில் ஒலிவ் இலையோடும் வந்திருக்கிறேன் தயவுசெய்து ஒலிவ் இலையை என் கையிலிருந்து நழுவுமாறு செய்துவிடாதீர்கள்...!'' என்று வரலாற்று முக்கியத்துவம் பெற்ற உரையை நிகழ்த்தினார்.

இருபது வருடங்களுக்குப் பின்னர்தான்.. அவரது ஒலிவ் இலை பற்றிய சிந்தனை மேற்கு நாடுகளுககு வந்தது, இங்கு...?

— மயூரன்

## இராசி பலன்

24-06-1995

சனிக்கிழமை

[தமிழுக்கு ஆனி—10]

துவாதசி பின்னிரவு 12-51 வரை, பரணி நண்பகல் 12-38 வரை, சித்தாமிர்தயோகம். இராகுகாலம் காலை 8-55 முதல் 10-25 வரை, சுபவேளை பி.ப. 2-55 முதல் 4-25 வரை

மேடம்: அறிவாற்றல், அனுவசிய செலவு, அதிகாரிசு... பாராட்டு.

இடபம்: மனச்சங்கடம், தாயார் கவலை, அலைச்சல்.

மிதுனம்: வாக்கு வன்மை, காரிய வெற்றி, பயணம்.

கடகம்: மதிப்புயர்தல், குடும்ப நல்லுறவு, பணவரவு.

சிங்கம்: தொழில் நஸ்டம், எதிர்பாராத துயர், யோசனை.

கன்னி[ தீயவர் தொடர்பு, அலட்சியப் போக்கு. வெறுப்பு.

துலாம்: தொழில் சிறபபு, புதிய வரவு, தெய்வீகப் பணி.

விருச்சிகம்: மன மகிழ்ச்சி, நண்பர் வருகை, உல்லாசம்.

தனுசு: மனநல பாதிப்பு, தேவையற்றவிவகாரம், கடன் சுமை.

மகரம்: விரும்பத்தகாத மாற்றம், காரிய தாமதம், குடும்பக்கவலை

கும்பம்; உறவினர்நன்மை, விருந்துபசாரம், துணைபோதல்.

மீனம்: நிம்மதியின்மை, தவறான எண்ணம், அலைச்சல்.

— ஜோஸ்யர்

# அந்நிய நாடுகளுக்கு செல்வோர் எமது கலாசாரத்தை மறக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

அந்நிய நாடுகளில் வாழ்ந்து வரும் எமது மக்களில் பெரும்பாலானோர் அந் நாட்டுக் கலாசாரத்தை பின்பற்றியே நடக்கிறார்கள் இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் எமது பாரம்பரிய கலாசாரப் பண்பாடுகளைக் கடைப் பிடிப்பது மிகக் குறைவாகவே உள்ளது. அத்துடன் தமிழ் மக்கள் பிறமதங்களில் மதம் மாற்றப்படும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன என ஹொலன்டிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

தனது வெளிநாட்டு அனுபவங்கள் பற்றி அவர்மேலும் தெரிவிக்கையில்: கடந்த பன்னிரண்டு வருடங்கள் ஹொலண்டில் வாழ்ந்து வந்தேன் ஆயிரக் கணக்கான இலங்கைத்தமிழர்கள் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் இந் நாட்டில் உள்ள பல்வேறு தொழில் நிலையங்களில் தொழில் பார்த்து வருகிறார்கள். இங்கு மொழி ஒரு பிரச்சனையாக உள்ளது. இந்நாட்டு மொழியைக் கற்றுக் கொண்ட எம்மவர்கள் தமதுதேவைகளை இலகுவாக மேற்கொண்டு வருகிறார்கள். இந்நாடுகளில் இலகு முறையில் மொழி போதிக்கப்பட்டுவருகிறது.

வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் அனைவருக்கும் இங்குள்ள ஸ்தாபனங்கள் மூலம் மொழி கற்பிக்கப்பட்டு சான்றிதழ்களும்வழங்கப்பட்டு வருகின்றது!இச்சான்றிதழ்கள் தொழில் ஒன்றை இங்கு பெறுவதற்கு பயன் படுத்திக் கொள்ள முடியாது, இங்கு கட்டாய கல்விப் போதனை மேற் கொள்ளப் பட்டு வருகிறது. ஐந்து வயது தொடக்கம் பதினெட்டு வயது வரையிலான சகல பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியது கட்டாயமான தொன்றாகும்.

இங்கிருந்து ஜேர்மனி, பிரான்ஸ் போன்றநாடுகளுக்கு நான் சென்றுள்ளேன் இங்கெல்லாம் வாழ்ந்து வரும் எமது மக்களில் அனேகமானவர்கள் தமிழரின் பாரம்பரிய கலாச்சார பண்பாடுகள் பின்பற்றப்படுவது மிகக் குறைவாகவே உள்ளது. அத்துடன் தமது நலன்களைக் கருத்தில் கொண்டு மதம்மாறும், மாற்றப்படும் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

மற்றைய நாடுகளைப் போல் வெளிநாட்டவர்களை வெளியேற்றும் நிகழ்வுகள் இங்கு இதுவரை ஏற்படவில்லை ஆனால் தொடர்ந்தும் இந்நிலை இங்கு நீடித்திருக்குமோ என்பது கேள்விக்குறியாகவே உள்ளது என்றார்.

162-சி

# ஜப்பானின் சரக்கு விமான சேவைக்கு அமெரிக்கா தடை

(வாஷிங்டன்)

அமெரிக்காவுக்கான ஜப்பானின் சரக்கு விமானப்போக்குவரத்துக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

ஜப்பானுக்கான தனது விமானப் போக்கு வரத்துக்கு அனுமதியளிக்க ஜப்பான் மறுத்ததையடுத்தே அமெரிக்கா இம் முடிவை எடுத்திருக்கிறது.

இதனுல் ஜப்பானின் கார் விற்பனை பெரும் பாதிப்பை எதிர்நோக்குகின்றது.

ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் மோட்டார்க்கார்கள் அமெரிக்காவில் நல்ல சந்தை வாய்ப்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கி- சி

# பிரான்சுடனுன உறவுகளில் ஆஸி. மாற்றம் செய்யும்

(கன்பரா)

பிரான்ஸ் மீண்டும் அணுகுண்டுப் பரிசோதனை நடத்தத் தீர்மானித்ததை எதிர்த்து அவுஸ்திரேலியா பிரான்ஸுடனுன தனது உறவுகளில் மாற்றம் செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

இதற்கு ஏதுவாகப் பிரான்ஸில் உள்ள அவுஸ்திரேலியத் தூதரை ஆலோசனைக்காகத் தனது நாட்டுக்கு அழைத்துள்ளது.

தென் பசுபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் அணுகுண்டுப் பரிசோதனையை நடத்துவதால், அவுஸ்திரேலியா உட்பட அந்தப் பிரதேச நாடுகளின் சூழல் மாசடையும் என அவுஸ்திரேலியா ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

பிரான்ஸுடன் ஏற்படுத்திக்கொண்ட பாதுகாப்புச் சம்பந்தமான உடன்படிக்கையில் பல மாற்றங்கள் செய்யப்போவதாகவும், இதன் முதற் கட்டமாகப் பிரான்ஸிலுள்ள தனது சிரேஷ்ட இராணுவ அதிகாரியையும் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துள்ளது.

பிரான்ஸ் இப்பிரதேசத்தில் மேற்கொளளும் அணுகுண்டுப் பரிசோதனைக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும்முகமாக இப்பிரதேச நாடுகளை அழைத்துக் கூட்டம் நடத்தவும் அவுஸ்திரேலியா தீர்மானித்துள்ளது.

கே-தீ-சி

# மாட்டுத் திருடன் மக்களிடம் பிடிபட்டான்

(யாழ்ப்பாணம்)

நண்பகல் வேளை வயலில் கட்டியிருந்த மாட்டை களவாக அவிழ்த்துச் சென்ற திருடன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டான்-

நீர்வேலி வயல் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

நீளக்கால் சட்டையும் சேட்டும் அணிந்தவாறு அப் பகுதிக்கு வந்த இளைஞன் வயல் பகுதியில் ஆட்கள் நடமாட்டம் குறைந்த நண்பகல் வேளையில் கட்டப்பட்டிருந்த மாட்டை அவிழ்த்துச் சென்றார்.

இதனை அவதானித்த அவ்வூர் மக்கள் சிலர் இவரது செய்கையில் சந்தேகம் கொண்டு அவரைப் தந்திரமாகப் பிடித்து விசாரித்த போதே உண்மை தெரியவந்தது. இவரை பிடித்த பொது மக்கள் உடனடியாக இவரை காவல் துறையிடம்ஒப்படைத்தனர்-

90-சி

## அதிபர் நியமனம்

வட்டுக்கோட்டை)

அராலி இந்துக் கல்லூரியின் உபஅதிபர் நாகமணி நடன சண்முகதாசன் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபராக கடந்த 19ம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்

134

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு தெருவடிச்சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை நிர்வாகிகள் விபரம் தலைவர்: நா. புவனேசன், செயலாளர்: க. நித்தியானந்தன், பொருளாளர்: பொ. யோகேஸ்வரன்.

-ரி

# விவசாயிகளுக்கென தனியான வங்கி

(கொழும்பு)

விவசாயிகளுக்கென தனியான வங்கியொன்று நாடு முழுவதிலும் அமைக்கபபடவுள்ளது.

200 கோடி ரூபா முதலீடுடன் அமைக்கப்படவுள்ள இந்த விவசாய வங்கியில் விவசாயியொருவர் 100 ரூபா பணத்தை வைப்புச் செய்து கணக்கை ஆரம்பிக்கமுடியும்.

இந்த விவசாய வங்கி விவசாயிகளுக்கான கடன் வழங்கலையே தனது பிரதான பணியாகக் கொண்டிருக்கும்.

தற்போது வர்த்தக வங்கிகளில் கடனைப் பெறுவதில் விவசாயிகள் எதிர் கொள்ளும் சிரமங்களை புதிய நடைமுறை இல்லாதொழித்து விடுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

-கி

# கோணேஸ்வரர் கோவிலில் காலைப் பூசை மட்டுமே

(திருகோணமலை)

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வர ஆலயத்தில் தினசரி காலைப்பூசை மட்டுமே நடைபெற்று வருகின்றது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை மெருமளவில் மக்கள் சென்று வழிபடுகின்றனர்,

திருகோணமலை அன்பு இல்ல பிள்ளைகள் பஜனை கூட்டுப் பிரார்த்தனை செய்வதுடன் ஆலயச்சுற்றுடலில் உள்ள பூமரங்களுக்கு நீர் ஊற்றி ஆலயத்தை துப்பரவு செய்து வருகின்றனர்.

ஆலயம் செல்லும் பாதையின் இருமருங்கிலும் இராணுவத்தினர் தரித்துநிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

154-சி

## சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

புறுப் பிடிப்பதற்காக வீட்டின் மேல் ஏறிய சிறுவன் வீட்டுக் கூரையில் இருந்து விழுந்து காயமடைந்தார்.

வண்ணார் பண்ணை வடமேற்கு பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த புண்ணியசாமி நிமலன் (12 வயது) என்ற சிறுவனே காயமடைந்தவராவார் சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

90-சி

# யாழ். ஆஸ்பத்திரி உள்ளக தொலைதொடர்பு சாதனங்கள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையின் உள்ளக தொலைத் தொடர்புசாதனங்கள் திருத்தியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒருமாத காலமாக பழுதடைந்த நிலையில் இருந்த இச்சாதனங்கள் தற்போது யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலைய தொழில் நுட்பவியலாளரால் திருத்தும் பணி நடைபெற்றுவருகிறது.

தற்போது 30 தொலைத் தொடர்புக் கருவிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

யாழ். போதனு வைத்தியசாலையில் மொத்தம் 96 தொலைத் தொடர்பு கருவிகள் இயங்கிவருகின்றன.

90

## உதவிப்பண கொடுப்பனவு

(மானிப்பாய்)

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், தொழுநோய், காசநோய் ஆகியவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களது மே மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்கள் மூலம் தற்போது வழங்கப்படுகின்றன

71-கி

# போரினுல் கொழும்பில் மீன்விலை அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் போரினுல் கொழும்பில் மீனின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளது.

மீனின் விலை அதிகரிப்பினுல் மக்கள் பெரும்பாலும் இறைச்சியையே உணவுத் தேவைக்குப் பயன்படுத்துவதாகவும் இதனுல் மீன் வியாபாரம் குறைந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. இதனுல் கொழும்பிலுள்ள மீன் விற்பனையாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்

கொழும்புக்கு மீன் பெரும்பாலும் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னுர், முல்லைத்தீவு பிரதேசங்களிலிருந்தே லொறிகளில் அனுப்பப்பட்டு வந்தன.

ஆனுல் தற்போது வடக்கு கிழக்குப் பிரதேசததில் கடல் வலயத் தடைச் சட்டத்தினுலும் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாமையினுலும் மீன் பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் கரையோரங்களில் பிடிக்கப்படும் மீன் அப்பிரதேசத்து மக்களுக்கும் போதியளவாக இல்லை. இந் நிலையில் கொழும்புக்கு மீன் அனுப்புதல் என்பது சாத்தியமற்றதாயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ர- சி

# விளக்குடன் சென்ற வயோதிபர் உடலில் தீப்பற்றி மரணம்

(நெல்லியடி)

மண்ணெண்ணை விளக்குடன் தண்ணீர் அள்ளச் சென்ற வயோதிபரின் உடலில் திடீரென தீப்பற்றியமையினுல் அவ்வயோதிபர் பரிதாபமாக மரணமானுர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை அரசடி வீதியில் நிகழ்ந்துள்ளது.

மட்டக்களப் பிலிருந்து இடம் பெயர்ந்து வந்து இவ்விடத்தில் வசித்து வந்தவரான சுப்பிரமணியம்-மகேசன் (வயது 65) என்பவரே மரணமானவராவர்.

மந்திகை மருத்துவமனையில் நடைபெற்ற மரண விசாரணையின் போது உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு.வி. நடராசா விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

160-

## இரு மணி நேர மின் விநியோகம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திற்கு இவ்வாரம் முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரு மணித்தியாலங்கள் மட்டும்மே மின்சாரம் வழங்கப்படுகிறது.

ஜெனரேற்றருக்கு கொழும்பிலிருந்து டீசல்வந்து சேராதபடியினுல் கையிருப்பிலுள்ள சொற்ப டீசல்களைக் கொண்டு காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை மட்டுமே மின் விநியோகம் செய்யப்படுகின்றது.

71-கி

# யாழ். பொது நுலகத்திற்கு கொழும்பிலிருந்து புதிய நூல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ், மாநகராட்சி மன்ற பொது நூலகத்துக்கு கொழும்பிலிருந்து ஒரு தொகுதி புதிய நூல்வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன

தமிழ் இலக்கிய நூல்கள் சமய நூல்கள் தமிழிலான விஞ்ஞான நூல்களே தற்போது எடுத்துவரப்பட்டுள்ளன,

ஒருலட்சத்து எண்பத்தொன்பதினாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த இந் நூல்கள் அனைத்தும் கொழும்பிலிருந்து அண்மையில் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது, மேலும் நாற்பாதினுயிரம் ரூபா பெறுமதியான தமிழ் களஞ்சிய நூல்கல் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது, இந்த நூல்களைக் கப்பல் மூலம் இங்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

162-கி

## முச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குச் சமூக சேவைகள் பகுதியினரால் யாழ் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முச்சக்கர வண்டிகளில் ஒன்பது, தென்மராட்சிப் பிரதேசச் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகளை அங்கவீனமுற்றோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தென்மராட்சிப் பிரதேசச் செயலகம் மேற்கொண்டுள்ளது.

170 சி

## பொலநறுவை ரயில் நிலையத்தில் இரு தமிழ் இளைஞர் கைது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு தமிழ் இளைஞர் இருவர் பொலநறுவை புகையிரத நிலையத்தில் வைத்து பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 13ம் திகதி கைது செய்யப்பட்ட இருவரும் இது வரையில் விடுவிக்கப்படவில்லை.

இலட்சுமணன் கிருஷ்ணகுமார் (வயது 18), கந்தசாமி திரவியகுமார் (வயது 20) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இருவரும் தற்போது தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## புதிய லொத்தருக்கு பெறுமதி வாய்ந்த கார்பரிசு

(கொழும்பு)
அமைச்சர்கள், நாடாளுமன்ற அங்கத்தவர்கள் ஆகியோரின் பாவனைக்கென, முன்னைய அரசாங்கம் இறக்குமதி செய்த பல தீர்வையற்ற வாகனங்களைப் புதிய லொத்தர் ஒன்றின் மூலம் பரிசாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்த ஆடம்பரக் கார்கள் ஒவ்வொன்றும் 40 லட்சம் ரூபா பெறுமதியானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'கிராண்ட் பென்ஸ் சுப்பர் சோ' என்ற பெயரில் இந்தப் புதிய லொத்தர் எதிர்வரும் 3ம் திகதியிலிருந்து அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

டிக்கட்டுகள் 100 ரூபா, 200 ரூபா, 300 ரூபா என்ற ரீதியில் விற்கப்படவுள்ளன. கே சி

# இராணுவம் சூடு மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
பொன்னாலைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களை நோக்கி காரைநகர் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து தொல்புரம் பாணுவெட்டியில் வசிக்கும் பொன்னையா கணேஸ் (30 வயது) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

(90-சி)

## வெதுப்பக ஊழியர்களுக்கு உதவுவதற்கு நிதியம்

(யாழ்ப்பாணம்)
வெதுப்பக ஊழியரின் நலன் கருதி யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தினால் வெதுப்பக உரிமையாளர் நம்பிக்கை நிதியம் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதில் ஒரு ஊழியர் மரணித்தால் பத்தாயிரம் ரூபா கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிணங்க முதன் முறையாக வடமராட்சிப் பகுதியில் உள்ள வெதுப்பகத்தில்கடமை புரிந்த ஒரு ஊழியர் சுகவீனம் காரணமாக மரணமடைந்தார். அவருக்கு வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் சிபார்சின் பெயரில் நிதியத்திலிருந்து பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டது. -கி

## 'இரவு நேரப் பயணிகள்' வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]
செங்கை ஆழியானின் 'இரவு நேரப் பயணிகள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இம்மாதம் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். ஆரியகுளம்-பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் எழுத்தாளர் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும்.

தொடக்கவுரையை யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கமும் வெளியீட்டுரையைடொமினிக் ஜீவாவும் மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ. சி. வேலாயுதம் நா. குழந்தைவேலு ஆகியோர் வழங்குகின்றனர்.

முதற் பிரதியை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ சிறில் பெறுகின்றார். -ம

## வேலணை ப.நோ.கூ. சங்கம் 6 மாணவர்க்கு அன்பளிப்பு

(வேலணை)
வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது அதிகாரத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மாணவர்களுக்கு தலா 1500 ரூபா வீதம் ஆறுயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவ்அன்பளிப்பு வைபவம் யாழ். நகரிலுள்ளசங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று யாழ். பல்கலைக்கழகத்திற்கு சித்தியடைந்த இரு மாணவர்களுக்கும் தலா 2500 ரூபாவையும் அன்றைய தினம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. 75-சி

## இன்று

(நெல்லியடி)
புலோலி தமிழ் இளைஞர் கழகமும் புற்றளை சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் சைவசமய மொழித்திறன் போட்டிகள் இன்று 24ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புற்றளை மகாவித்தியாலயத்தில நடைபெறவிருக்கின்றது 160

0 0

(அரியாலை)
யாழ். சுண்டுக்குழி புனித யுவானியார் வருடாந்த திருவிழா இன்று சனிக்கிழமை பங்குத்தநதை அருட்திரு செலவராசா அடிகள் தலைமையில் நிறைவு பெறுகின்றன- 59

0 0

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி திட்ட மகளிர் குழுப் பயிற்சி வகுப்பு இன்று 24ம் திகதி சனிக்கிழமை மாவட்ட மகளிர் குழுத்தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில நடைபெறும், 170

0 0

(வடமராட்சி)
மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலைய 47 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று 24ம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறுகின்றது. 51

0 0

(யாழ்ப்பாணம்)
கரவெட்டி ஞானாசாரியார் வித்தியாலய இல்லமெய்வல்லுனர் போட்டி இன்று சனிக்கிழமை மாலை விததியாலய விளையாட்டுமைதானத்தில் நடைபெறும். 90

0 0

[யாழ்ப்பாணம்]
நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆறுவது ஆண்டு விழா இன்று 24ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் லயன் கே. துரைராசா தலைமையில் நடைபெறும்.

0 0

[வட்டுக்கோட்டை)
வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 24-ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

ஜுலை மாதம் 3-ம் திகதி தேர்த் திருவிழாவும், 4-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன,

-139-கி

0 0

[யாழ்ப்பாணம்]
நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டதின் கீழ் யாழ். மாநகராட்சி மன்றம் நடத்தும் 'எயிட்ஸ்' நோய், 'பாலியல் துர்நடத்தைகளில்சிறுவர்களின் பங்கு' பற்றிய கருத்தரங்கு இன்று 24-ம் திகதி சனிக்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. -162-கி

## பாணின்விலை ரூபா. 5

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தமது பேக்கறியில் உற்பத்தி செய்யும் வெதுப்பியை (பாண்) முன்னைய விலையிலேயே தொடர்ந்தும் விற்பனை செய்து வருகிறது.

மேற்படி சங்கம் 350 கிறும் நிறையுள்ள பாணை தொடர்ந்தும் ஐந்து ரூபாவாக விற்பனை செய்து வருவதாகவும், ஐந்து ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டால் இது பற்றி தமக்கு முறையிடுமாறும் சங்க பொது முகாமையாளர் திரு. வயிரவநாதன் தெரிவித்துள்ளார். 72

## மல்லி, வெந்தயம், சீரகம் இங்கும் பயிரிட முயற்சி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்திலும் மல்லி- வெந்தயம்பெருஞ்சீரகம் போன்ற தானியங்கள் பயிரிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தானியங்களின் விதைகளை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் மேற்கொண்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் ஒவ்வொரு பலநோச்கு கூட்டுறவு சங்கங்களினூடாக மூன்று பேர் தெரிவு செய்யபபட்டு இத்தானியங்களின் விதைகள் அவர்களுக்கு வழங்கப்படும்.

இத்தானியங்களின்செய்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் எமது பெருமளவு தேவை பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 170-சி

## உணவு முத்திரையின் 10.வது தொடர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)
வறுமை நிவாரண உணவு முத்திரையின் பத்தாவது தொடரை யாழ், பிரதேச செயலகம் மக்களுக்கு வழங்கி வருகின்றது.

இவ் உணவு முத்திரைகள் கிராமசேவையாளர்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வறுமை நிவாரண உணவு முத்திரைகள் பெறுபவர்கள் உணவு முத்திரையின் ஒன்பதாவது தொடரின் அடிச்சட்டையை தத்தம் கிராம உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பித்து புதிய முத்திரைகளை பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகம் கேட்டுள்ளது. 170-சி

## வடமராட்சி, கிழக்குக்கு புதிய பஸ்சேவை ஆரம்பம்

(தாளையடி)
வடமராட்சி கிழக்கு பிரதேசமக்களின் போக்குவரத்து வசதி கருதி வடமராட்சி கிழக்கு சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் உடுத்துறை-யாழ்ப்பாணம் புதிய சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

காலை 6-30 மணிக்குப் புறப்படும் சிற்றூர்தி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு மீண்டும் பகல் 12-40 மணிக்குப் புறப்பட ஒழுங்குகளை இணையத்தினர் செய்துள்ளனர்

பருத்தித்துறையிலிருந்து காலையிலும், உடுத்துறையில் இருந்து மாலையிலும் புதிய சேவை ஒன்றையும் வடமராட்சி கிழக்கு சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினர் புதிதாக ஆரம்பித்துள்ளனர்.

-163-கி

## இந்தியாவில் தொலைதொடர்பு ஊழியரின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(புதுடில்லி)
இந்தியாவில் தொலைத்தொடர்பு ஊழியர்களின் 5 நாள் நாடு தழுவிய வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அரசுக்கும் ஊழியர் சங்க தலைவர்களுக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தொலைத்தொடர்பு தகவல் துறை தனியார் மயமாக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டார்கள் கே-சி

## கொழும்பில் அகில உலக சைவ மகாநாடு டிசம்பரில் நடைபெறும்

(கொழும்பு)
சர்வதேச சைவ மகாநாடு இலங்கையில் இவ் வருடம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் கொழும்பில் இம் மகாநாட்டை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியா, இலங்கை, மலேசியா சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வதியும் சைவ அறிஞர்கள் இம் மகாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். கி-சி

## புறநிலைப்படிப்புகள் புதிய கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின்கீழ் இவ்வாண்டில் கற்பிக்கப்படும் புதிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருதாக புறநிலைப் படிப்புக்கள் அலகு இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்வாண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் கற்கை நெறிகளான வாகனப்பொறியியல், தொழிற்றுறைப் பொறியியல் பிரயோகங்கள், வார்ப்புத் தொழிற்கலை, சூழல் பாதுகாப்பு, ஆரம்ப உளவியல். கிராமிய அபிவிருத்திக் கல்வி, சிறு தொழில் முயற்சிகளுக்கான கணக்குப் பதிவியல், களஞ்சிய முகாமை, அலுவலக முகாமை ஆகிய கற்கை நெறிகள் புறநிலைப் படிப்புக்கள் அலகின் கீழ் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படஇருக்கும்கற்கை நெறிகளாகும்.

இக்கற்கை நெறிகளில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் சேர்ந்து கற்றுக்கொள்ளும் வகையில் இவர்களின் எதிர்காலதொழிற்பாடுகளுக்கு இது ஒரு வழிகாட்டியாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

புறநிலைப் படிப்புக்கள் அலகின் கீழ் சென்ற ஆண்டில் பத்துக்கும் மேற்பட்ட கற்கை நெறிகளில் 2.000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு இக்கற்கைநெறிகளை முடித்துக்கொண்டதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

[162-ரி]

# கொழும்பில் தமிழர் மீது மிரட்டல், பணம்பறிப்பு தொடர்ந்து அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் தெகிவளைக்கும் வெள்ளவத்தைக்கும் இடையிலுள்ள ரஞ்சன் விஜேரத்ன மாவத்தையில் பல தமிழர்கள் தொடர்ச்சியாக தாக்குதலுக்கும் மிரட்டலுக்கும் உள்ளாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில கடற்கரையோரம் காற்று வாங்குவதற்காகவும் உடற்பயிற்சிக்காகவும் சென்று திரும்பும் தமிழர்களை அவ் வீதியைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் மிரட்டியும், அடித்தும், காசு பறித்தும், இம்சைப்படுத்தியும் வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அண்மையில் இவ்வீதியில் வைத்து சிறிஸ்கந்தராஜா என்னும் தமிழ் இளைஞர் மிரட்டலுக்குள்ளானார். இம்மிரட்டல் தொடர்பாக அவர் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்தபோது அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறி பொலிசாரும் மிரட்டியுள்ளனராம்.

இதேவேளை புறக்கோட்டை மக்கள் வங்கிச்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை வெள்ளை நிறக் காரில் வந்து கடத்திச்சென்ற விசேட அதிரடிப்படையினர் புலிகளுக்கும் உனக்கும் என்ன தொடர்பு எனக்கூறி கடுமையாக தாக்கிய பின்னர் அவரிடம் இருந்த பாஸ் போர்ட்டையும் 7,800 ரூபா பணத்தையும் பறித்துக் கொண்டு சென்றுவிட்டனராம்.

கடும் தாக்குதலுக்குள்ளான அவ் இளைஞர் தற்போது வாயிலிருந்து இரத்தம் கக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட இளைஞர் கொழும்பில் பிறந்து வளர்ந்து நிரந்தரமாக வசித்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல காலமாக இவ்வாறான தாக்குதல்களும், மிரட்டல்களும், பணம்பறிப்பு நடவடிக்கைகளும் கொழும்பில் இடம் பெற்றுவருவது தெரிந்ததே. ரி

# பங்கீட்டு அடிப்படையில் 5 கிலோ மா விநியோகம்

[யாழ்ப்பாணம்]

'ஹபரண' கப்பலில எடுத்துவரப்பட்ட மா பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு விநியோகிப்பதற்கு யாழ். செயலகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது

பங்கீட்டு அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு ஐந்து கிலோ வீதம் மக்களுக்கு வழங்கப்படும்.

பருத்தித்துறைமுகத்தில் கோதுமை மாவை இறக்கி முடித்துவிட்டு ஹபரண கப்பல் இன்று சனிக்கிழமை திருகோணமலை நோக்கிசெல்லும்.

திருகோணமலையில் இருந்து மீண்டும் ஒரு தொகுதி கோதுமை மாவை பருத்தித்துறை துறைமுகத்துக்கு இக் கப்பலில் ஏற்றிவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இன்று திருகோணமலை செல்லும் ஹபரண கப்பலில் இங்கிருந்து தபால் பொதிகளும் அனுப்பி வைக்கப்படும். 170ரி

# மரணதண்டனை அமுலுக்கு சர்வதேச அமைப்பு கண்டனம்

(லண்டன்)

இலங்கையில் மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்ய அரசு எடுத்துள்ள முடிவை லண்டனில் உள்ள சர்வதேச மனித உரிமைச்சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

மீண்டும் மரணதண்டனையை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளமை மனிதாபிமானத்துக்கு முற்றிலும் எதிரான ஒரு நடவடிக்கையெனவும் சர்வதேச மனித உரிமைச் சங்கம் தெரிவித்துள்ளது

மரணதண்டனை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமையை தெற்கிலுள்ள பல அமைப்புக்களும் கண்டித்துள்ளமை தெரிந்ததே. கிரி

# கொழும்பில் முக்கிய இடங்களில் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை

(கொழும்பு)

கொழும்பில் கேந்திர நிலையங்களில் வீதியோரங்களில நிறுத்தப்படும் வாகனங்களை பாதுகாப்புக்கருதி பாரம் தூக்கிகளின் உதவியுடன் அகற்றுவதற்கு பொலிஸாருக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பில் குண்டுவெடிப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வாகனக் குண்டு வெடிப்பை தடுக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதற்கமைய கேந்திர நிலையங்களுக்கு முன்னும், மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் அரச, தனியார் அலுவலகங்களுக்கு அருகிலும் வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவதை பொலிஸார் தடை செய்துள்ளனர்.

இந்த தடையையும் மீறி சந்தேகத்துக்கிடமான முறையில் வாகனங்கள் நிறுத்தப்படின் அதன் உரிமையாளரை சமூகமளிக்குமாறு ஒலிபெருக்கி மூலம் முதலில் பொலிஸார் அறிவிப்பர்.

அறிவிப்புச் செய்யப்பட்டு அரைமணி நேரத்துக்குள் வாகன உரிமையாளர் சமூகமளிக்காவிடில் குறித்த வாகனம் பாரம் தூக்கிமூலம்பொலிசாரால் அப்புறப்படுத்தப் படும்.

இவ்வாறு பாரம் தூக்கி மூலம் வாகனத்தை அகற்றும் போது வாகனத்திற்கு ஏற்படும் சேதத்திற்கு பொலிஸார் பொறுப்பேற்கமாட்டார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கிரி

# பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரும் இராஜினமா

(லண்டன்)

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த பதினாறு வருடங்கள் அமைச்சராக இருந்த டக்ளஸ் ஹேர்ட் அவர்கள் பதவியிலிருந்து விலகினாலும் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பார்.

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் தீவிர ஆதரவாளரான இவரின் இம்முடிவு பிரிட்டிஷ் அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

தலைசிறந்த அமைச்சர்களில் ஒருவராக டக்ளஸ் ஹேர்ட்டை பிரதமர் ஜோன் மேஜர் வர்ணித்துள்ளார். க-கி-தீ-ரி

## மட்டு, அம்பாறை மக்களுக்கு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தைச்சேர்ந்தஇடம் பெயர்ந்து தற்போது யாழ். குடாநாட்டில் வசிக்கும் அனைத்து பொதுமக்களுக்கும் தங்கள் நன்மை கருதி தங்கள் விபரங்களை மட்டு. அம்பாறை தொடர்பகம், யாழ்ப்பாணம் கோயில்வீதியில் அமைந்துள்ள தென்னகத்தில் எதிர்வரும் 26ம்திகதியிலிருந்து 8-7-1995க்கு இடையில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். -ரி

# விமான நிலையத்தின் பாதுகாப்பு தீவிரம்

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை வரவேற்பதற்காக எவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அத்துடன் வெளிநாடு செல்வோரை அனுப்புவதற்காக ஒருவர் மாத்திரமே கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கூடச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

விமான நிலைய வளவினுள் வாகனங்கள் நிறுத்திவைக்க அனுமதிக்கப்படமாட்டாது. மினுவாங்கொட வீதியோரத்தில் வாகனத் தரிப்பிடம் மாற்றப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு சம்பந்தமாக இந்த விதிமுறைகள் கடுமையாக அனுசரிக்கப்படுமென்றும் இதற்கு பொதுமக்கள் ஆதரவுதர வேண்டுமென்றும் விமானநிலைய முகாமையாளர் தெரிவித்துள்ளார். கே-க-ரி

## அரசின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளார்.

இப்பேச்சுக்களின் போது அரசியல் கட்சிகள், மதபீடங்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையில் செய்யப்படும் திருத்தங்கள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்கும் நோக்கத்தை கைவிட்டு அபிப்பிராயம் சொல்பவர்களை திருப்திப்படுத்துவதாக அமைந்து விடுகின்றன என்று தெரியவருகிறது.

இந்த தீர்வுத்திட்டம் நாடாளுமன்றக் கட்சிகள் மற்றும் மத பீடங்களின் அனுசரணையுடன் வெளியிடும் காலம்வரும் போது அது இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு பதில் அதை இன்னும் தீவிரப்படுத்திவிடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளதாக அரசுடன் தொடர்புடைய புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் தீர்வு திட்டத்தை தாமதிப்பது தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில் தீர்வு திட்டம் தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும் அரசாங்கம் தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்கையை பிடித்து வைத்திருக்க முடியும் தீர்வு திட்டம் வெளிவந்தால் அது வெறும் புஸ்வாணம் என்பது தெரிந்துபோய் விடும் என்றும்அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ரி

# விவசாயக்கல்லூரி அனுமதி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

விவசாயக் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவதற்காக விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை 01-07-1995 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடாத்தப்படும் என விவசாயப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் அவர்களுக்குரிய அனுமதி அட்டைகளை மேற்படி பரிட்சை நிலையத்தில் பெற்று பரீட்சை எழுதுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கி.ரி

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா இவ்வாறான தொரு கோரிக்கையை முன் வைத்திருப்பது இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான மூலமான இனப்பிரச்னைக்குதீர்வுகாணும் முயற்சிக்கு வைக்கப்பட்ட கண்ணிவெடியாகும் என்று கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசாங்கமும் இ. காங்கிரஸ் கட்சியும் தமது சொந்த நெருக்கடியிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்காக இன்னொரு நாட்டின் அரசியல் அமைதிக்கு நெருக்கடியை தரவல்ல கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இந்தியாவின் இந்த முடிவு வடக்கு- கிழக்கு மக்கள் மீதும் அவர்களது உரிமைப்போராட்டத்தின் மீதும் அவர்களது ஜனநாயக பூர்வமான எதிர் காலத்திற்கும் இந்தியா போட்டுள்ள நிரந்தரமானஒருதடை என்பது வெளிப்படை.

இந்தியாவின் கோரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் காது கொடுக்குமானால் இலங்கையில் ஆகக்குறைந்தது 25-30 ஆண்டுகளுக்கு தொடர்ந்து யுத்தம் நடக்குமென்றும் அப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ரி

## மட்டு குண்டு

[1ம் பக்கத்தொடர்ச்சி]

பொலிஸ் காவலரணில் குண்டு ஒன்று தவறுதலாக வெடித்தமையினால் மேற்படி இரு பொலிஸாரும் பலியானார்கள். இச்சம்பவத்தில் தமிழ் பெண் ஒருவரும் காயமடைந்தார். - ரி

# மருத்துவக் கல்லூரி மாணவர் விவகாரம் பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தில் இன்று முடிவு செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வடஇலங்கை தனியார் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் 37 பேரையும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இணைப்பது குறித்து டாக்டர் எஸ். ஆனந்தராஜா தலைமையிலான குழு பல்கலைக்கழக துணைவேந்தருக்கு சமர்ப்பித்த அறிக்கையை இன்றைய பேரவைக் கூட்டத்தில் துணைவேந்தர் சமர்ப்பிப்பார் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

தனியார் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் தொடர்பாக இன்றைய கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிய வருகிறது. 170-ரி

## ஐ தே க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்களுடன் அண்மையில் நடாத்திய சந்திப்பின் போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த ஐ. தே. க. கட்சி அரசாங்கத்தினர் தமிழ் மக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை கட்டவிழ்த்துவிட்டனர் என்றார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர ஒரு வருடகாலத்திறகு காலக்கெடுவிதித்துள்ள பிரதி பாதுகாப்பு அமைச்சர் முன்னைய ஆட்சியின் போது படையினர் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களை பாதுகாக்கவே பயன்படுத்தப்பட்டனர் என்றார். க ரி

## கல்லடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் ரோந்து பொலிசார் மீதே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலை அடுத்து கல்லடிப்பகுதியில் சிலமணி நேரம் பெரும் பதற்யம் நிலவியது. - ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 65ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.